**<u>DEPOSITION OF WITNESS</u>**

---

**MCOP. No.** 1510/2024 **DATE:14.07.2025**

Deposition of Witness : P.W.1

Name : Mrs. Rejinamery

Father/Husband Name : Mr. Ezhilrajan

Age :

Address :

Cell Phone No. :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 14th day of July 2025.

-----------------------------------------------------------------------------------------------------

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

**<u>2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் விபத்தினை நேரடியாக பார்க்கவில்லை. விபத்து குறித்து நான் புகார் கொடுக்கவில்லை. நான் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொன்னவாறு விபத்து நடக்கவில்லை என்றும், என் கணவர்தான் அவரது வாகனத்தை அஜாக்ரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டிச்சென்று விபத்தினை ஏற்படுத்தினார் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சம்பந்தமான வரைபடம் தாக்கல் செய்யவில்லை. நான் B.Com., படித்துள்ளேன். என் கணவர் B.B.A., படித்துள்ளார். அவர் B.B.A., படித்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் கணவருடன் உடன் பிறந்தவர் அவருடன் சேர்த்து ஐந்து நபர்கள். அதில் 1 பெண்ணும், ஆண்மக்கள் நான்கு பேர். எனது மாமியார், மாமானார் ஊரில் இருக்கிறார்கள். அவர்கள் நாகர்கோவிலில் இருக்கிறார்கள். நான் Housewife ஆக இருந்தேன். என் கணவர் இறந்தபிறகு அவரது வியாபாரத்தை

கவனிக்க முயன்றேன். ஆனால் என்னால் முடியாமல் மூடிவிட்டேன். நான் வருமானவரி செலுத்திவருகிறேன். என்னுடைய வருமானவரி கணக்கினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அவருடைய வியாபாரத்தை என்னால் தொடர முடியாமல் மூடிவிட்டேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான்தான் தொடர்ந்து வியாபாரத்தை கவனித்து வருகிறேன் என்றும், அதனை மூடவில்லை என்றும், எனக்கு வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அந்த வியாபாரத்திற்கு TIN Number உள்ளது என்றால் சரிதான். அவர் பெற்ற வருமானத்தைவிட நான் அதிக வருமானம் பெற்றுவருகிறேன் என்றும், அதனால்தான் என்னுடைய வருமானவரிக்கணக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கேட்டுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றும் அது கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** - இல்லை.

X Sd./

சாட்சியின் கையொப்பம்

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:14.07.2025.

NAZIR AHAMED

Digitally signed by NAZIR AHAMED

தலைமை நீதிபதி,
சிறுவழக்குகள் நீதிமன்றம்.